DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 161/2024** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : ராஜாமணி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 26.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 26th February 2026.

**எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது புன்னைவனபேரியில் குடியிருந்து வருகிறேன். ராமகிருஷ்ண நம்பியார் மகன் முருகனை தெரியாது. நான் எஸ்பிகே என்ற பெயரில் செங்கமால்சூலை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். 2013 ம் ஆண்டு ஒரு நாள் இரவு 11 மணிக்கு நான் வீட்டில் இருந்தபோது எனது செங்கமாலிலிருந்து முருகேசன் என்பவர் எனக்கு போன் செய்து எதிரி ராஜ்குமார் என்பவர் அவரது நண்பரை வெட்டிவிட்டதாக என்னிடம் சொன்னார். உடனே நான் எனது செங்கமாலுக்கு சென்றேன். வெட்டுபட்ட முருகன் என்பவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். முருகனுக்கும், எதிரிக்கும் இடையில் எதனால் சண்டை ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது. கரிவலம் போலீசார் எனது செங்கல் சேம்பருக்கு வந்து என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலும், அத்தாட்சியிலும் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். போலீசார்

என்னிடம் எதிரி எந்த ஆயுதத்தால் தாக்கினர் என்று கேட்டனர். நான் அதற்கு ராஜ்குமார் அரிவாளால் தாக்கினார் என்று கூறினேன். மேற்படி அரிவாளை எனது சேம்பருக்கு பக்கத்தில் உள்ள கருவேலிமுள் வேலியிலிருந்து எதிரி எடுத்து காவல் ஆய்வாளரிடம் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள அரிவாளைத்தான் எதிரி காவல்ஆய்வாளரிடம் எடுத்துக்கொடுத்தாரா என்றால் துணியில்மடித்துகொடுத்ததால் நான் பார்க்கவில்லை. **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆகவும், அத்தாட்சியில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சாஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. எதிரி அரிவாளை எடுத்துக்கொடுக்கும்போது முருகேசன் என்பவரும் உடன் இருந்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பகுதி பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

<u>அரசுதரப்பில் குறுக்குவிசாரணை</u>

எதிரி ராஜ்குமாரும், சாட்சி முருகனும் நண்பர்களா என்றால் அவர்கள் நண்பர்கள் என நான் கேள்விப்பட்டேன். எதிரி ராஜ்குமார் எனது செங்கசூலையில் வேலை பார்த்தாரா என்றால் வேலை பார்த்தார். சாட்சி முருகனிடம் எதிரி ராஜ்குமார் TN 76 K 7027 என்ற எண் கொண்ட Super XL மோட்டார் பைக்கை வாங்கிவிட்டு 6 மாதமாக திரும்ப கொடுக்காததால் அதை கேட்டு முருகன் என்பவர் எனது செங்கசூலைக்கு வந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 09.06.2013 ம் தேதி இரவு 11 மணிக்கு சாட்சி முருகன் எதிரி ராஜ்குமாரின் வீட்டிற்கு சென்று பைக்கை கேட்டபோது எதிரி அவரை பார்த்து அசிங்கமாக பேசி, வீட்டில் இருந்த அரிவாளை எடுத்து வந்து சாட்சி முருகனை மாறிமாறி வெட்டினார் என்றும், அதனால் அவரது இடதுகால்முட்டியின் பின்பக்கம், வலது கால் முட்டுக்குகீழ், இடது கை தோள்பட்டை ஆகிய இடங்களில்வெட்டுக்காயம் ஏற்பட்டது என்றும், அதை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீசாரிடம் கூறினேனா என்றால் நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. ஆனால் சம்பவத்தை பற்றி கேள்விப்பட்டேன். எதிரி முருகனை பார்த்து பைக்கை கேட்டு வந்தால் அவரை கொலைசெய்துவிடுவதாக கொலைமிரட்டல் விடுத்தார் என்றால் அது

பற்றி எனக்கு தெரியாது. நானும், முருகேசனும் சம்பவத்தை நேரில் பார்த்தோம் என்றாலும், நாங்கள் இருவரும்தான் முருகனை சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம் என்றாலும் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்பே முருகன் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். மறுநாள் மாலை 3 மணிக்கு எதிரியை பெரியூர் பஸ்ஸ்டாப்பில் வைத்து என் முன்பாகவும், தங்கமாரி என்பவர் முன்பாகவும் போலீசார் கைது செய்தார்கள் என்றால் சரியல்ல. அப்போது எதிரி ராஜ்குமார் தானாக முன்வந்து எங்கள் முன்பு ஒப்புதல் வாக்குமுலம் அளித்தார் என்றாலும், அதன் அடிப்படையில்சம்பவத்திற்காக அவர் பயன்படுத்திய அரிவாளை மாலை 4.15 மணிக்கு ராஜ்குமாரின் வீட்டு பின்பக்கம் உள்ள முள்செடியிலிருந்து அவர் அடையாளம் காட்டி ஆஜர்படுத்தினார் என்றாலும், அந்த வகைக்கு ஒரு அத்தாட்டி தயார் செய்யப்பட்டது என்றாலும், அந்த ஒப்புதல்வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி ஆகியவற்றில் நானும், தங்கமாரியும் கையொப்பம் செய்தோம் என்றாலும், என் முன்புக்கும், தங்கமாரி முன்புக்கும் அரிவாள் கைப்பற்றப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நான் முதலாவதாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள அரிவாள்தான் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட அரிவாள் என்றாலும், அது கைப்பற்றப்பட்டபோது அதை நான் பார்த்துவிட்டு தற்போது அது பற்றி தெரியாது என்று நான் பொய்சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 161/2024** |
| Deposition of Witness for | : PW 2 |
| Name | : இளையராஜா |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 26.02.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 26th February 2026.

**எதிரி ஆஜர். எதிரிதரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது புன்னைவனபேரியில் குடியிருந்து வருகிறேன். மாடசாமி மகன் பெருமாளை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சுமார் 11 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் காலை 8 மணியளவில் எஸ்பிகே செங்கல்சேம்பர் பக்கம் கரிவலம் போலீசார் வந்து அங்கு வைத்து படம் வரைந்துகொண்டிருந்தார்கள். அப்போது நானும், பெருமாளும் அங்கு இருந்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். போலீசார் தயார் செய்த பார்வை மகஜரில் நானும், பெருமாள் என்பவரும் கையொப்பம் செய்தோம். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் எழுதப்படாத வெள்ளைப்பேப்பரில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். நான் எங்கு வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சம்பவம்

நடந்த இடத்தில் வைத்துகையொப்பம் செய்தேன். என்னை காவல் உதவி ஆய்வாளர் அல்லது ஆய்வாளர் விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை.

**மறுவிசாரணை இல்லை.**